## களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2013

களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 1985 இன் 02 ஆம் இலக்க தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவக கட்டளையின் 20 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2 நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சரெக் (Swedish Agency for Research Corporate with Developing Countries) செயற்திட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 79,431 தொகையான மீதியொன்று 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டன.

(ஆ) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக 2010 ஆண்டிற்குரிய நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 62,307 தொகை, 2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்கள் ரூபா 23,000 மற்றும் 2010 ஆம் ஆண்டிலிருந்து வரும் செலுத்த வேண்டிய ரூபா 368,625 செலவினம் என்பன 2014 செப்தெம்பர் வரையிலும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டின் இறுதியிலான செயற்திட்டத்திற்காக ஏனைய வெளித்தரப்பினரிடமிருந்து கிடைத்த மானியங்களிலிருந்து எஞ்சிய ரூபா 644,907 தொகை பொறுப்புக்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 கணக்காய்விற்கான சான்றின்மை**

பல ஆண்டுகளுக்கு முன் நிறைவு பெற்ற சரெக் செயற்திட்டத்திற்குரிய ரூபா 5,463,897 தொகையான நிலையான சொத்துக்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், அச் சொத்துக்கள் பௌதீக ரீதியாக அவதானிக்கப்படவில்லை.

---

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட 1985 இன் 02 ஆம் இலக்க தொல் பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டி | வழிகாட்டியின் பிரகாரம் பட்டப்பின் படிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றினுள் வெவ்வேறு பாடநெறிகள் நடாத்தப்பட முடியுமெனினும் அதற்கு புறம்பாக மீளாய்வாண்டில் வருமானம் உழைப்பதற்காக 02 சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | (i) 757(2) ஆம் பிரிவு | நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 161 சொத்து உருப்படிகளில் பற்றாக்குறை காணப்பட்டதுடன், அது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 1647 ஆம் பிரிவு | வாகனங்களுக்குரிய ஓட்டப் பதிவேடுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் இறுதி வரையிலான தொல்பொருளியல் தொடர்பான அடிப்படை பாடநெறியின் மிகையில் 30 சதவீதமான ரூபா 110,775 தொகையும் அபியா (Annual bibliography of Indian Archeology) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக இரண்டு பேருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 120,000 தொகையான படிகள் திறைசேரியின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டிருக்க வில்லை. |
| (உ) | 1990 ஒக்தோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3. நிதி மீளாய்வு

--------------------------

### 3.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,823,191 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,243,555 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 6,066,746 தொகையான வீழ்ச்சியொன்றாக இருந்ததுடன், அக்குறைவிற்கு அரசின் மானியங்கள் ரூபா 4,157,703 ஆல் குறைவடைந்தமை மற்றும் தனிப்பட்ட சம்பளங்கள், பிரயாணச் செலவினம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் என்பன ரூபா 2,237,590 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 4.1 கல்விசார் செயலாற்றல்

------------------------------------------

தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கல்வி ஆண்டுகள் சிலவற்றின் மாணவர்கள் பதிவு, இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுதல் மற்றும் பரீட்சையில் சித்தியடைதல் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) பட்டப்பின்படிப்பு தரத்திலான பாடநெறிகளை நடாத்தல்

| கல்வி ஆண்டு | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை | கைவிட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கை | இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் எண்ணிக்கை | சித்தியடைந்த மாணவர் எண்ணிக்கை | சித்தியடையந்த மாணவர் எண்ணிக்கை சதவீமாக |
|---|---|---|---|---|---|
| ---------- | ---------------- | ------------------- | ---------- | -------------- | --------------------- |
| 2010/2011 | 114 | 12 | 54 | 51 | 94 |
| 2011/2012 | 174 | 02 | 48 | 44 | 92 |
| 2012/2013 | 95 | - | 36 | 29 | 81 |

(i) 2012/2013 ஆம் கல்வியாண்டில் 03 பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பாடநெறிகளும் 02 கலைமானிப் பாடநெறிகளும், விஞ்ஞானமானி, கலாநிதி மற்றும் கலாநிதி விஷாரத என்பன 01 பாடநெறி வீதமும் நடாத்தப்பட்டிருந்தன. இதற்காக மொத்தமாக பதிவுசெய்யப்பட்டிருந்த மாணவர் எண்ணிக்கை 95 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டினை விட 45 சதவீதத்தால் மாணவர் பதிவில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) 2012/2013 ஆம் கல்வியாண்டில் தொல்பொருளியல் மற்றும் நூதனசாலை தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிக்காக இறுதிப்

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 36 ஆக இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அது 25 சதவீதத்தால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2012/2013 ஆம் கல்வியாண்டில் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 29 ஆக இருந்ததுடன், அது 81 சதவீதமாக இருந்தது.

(ஆ) தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்டிருந்த பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் அல்லாத பாடநெறிகளுக்காக இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 98 ஆக இருந்ததுடன், சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. அதன் பிரகாரம் சித்தியடைதல் சதவீதம் 71.43 ஆக இருந்தது.

(இ) 2012/2013 ஆம் கல்வியாண்டிற்காக பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் தொடர்பாக பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கு 03 ½ முதல் 07 ½ மாதங்கள் வரையிலும், பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் அல்லாத பாடநெறிகளுக்காக 07 முதல் 09 மாதங்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவச் செயற்திறனின்மை

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 பெப்ரவரி 14 ஆம் திகதி நிறுவகத்தில் நடைபெற்ற 239 ஆம் இலக்க முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது நிறுவகத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் அதிகாரம் 2012 நவம்பர் 01 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் ரூபா 2,000,000 வரை உதவி நிதியாளர்களுக்கும் ரூபா 2,000,000 மேற்படும் கொடுக்கல்வாங்கல்களுக்காக பிரதி நிதியாளருக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,000,000 இனை விஞ்சிய சம்பளம் மற்றும் வேதனங்கள், தொலைபேசி, நீர் மின் பட்டியல், ஊழியர் சேமலாப நிதியம் போன்ற செலவினங்களும் உதவி நிதியாளர் சான்றுறுதிப்படுத்துவதன் காரணமாக மீளாய்வாண்டின் போது பிரதி நிதியாளரின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கலாநிதி ரோலன்ட் சில்வா நிதியத்தால் நிறுவகத்தின் மாணவர்களுக்காக வருடாந்தம் தங்கப் பதக்கங்களையும் பணப் பரிசில்களையும் வழங்குவதற்காக ரூபா 1,000,000 தொகை 2009 ஆம் ஆண்டில் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்காக 2013 திசெம்பர் 31 வரை ரூபா 612,142 தொகையான வட்டி வருமானம் கிடைத்திருந்ததுடன், மீளாய்வாண்டிலும், நோக்கங்களுக்குட்பட்ட செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 திசெம்பர் 31 உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் இருப்புச் சீராக்கல் கணக்காக ரூபா 41,505 தொகையான மீதியொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து தீர்வு செய்யப்படாது முன்கொண்டு வரப்பட்டுக் காணப்பட்டது.

(ஈ) 2008 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை மற்றும் பிணைப்பொறுப்புக்கள் என்பவற்றை மீறியதால் கிடைத்த ரூபா 229,402 பெறுவனவுகள் திறைசேரியின் அங்கீகாரமொன்று இல்லாமல் நிதியக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன், 2013 திசெம்பர் 31 வரையில் முதலீடு செய்யப்படாமல் வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

2013 திசெம்பர் 31 உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 39 ஆக இருந்ததுடன், உள்ளவாறான எண்ணிக்கை 33 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்கள் 06 ஆக இருந்தன.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி ஆண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய பிரதான செயற்பாடுகள் 16 ஆக காணப்பட்டது. அதில் 04 பிரதான செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போயிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் பொருண்மையான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், நிலையான சொத்துக்களை கையேற்பதற்கான மூலதன ஏற்பாடுகளிலிருந்து 84 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பாதீடானது செயற்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) நூலகம்

(இ) வாகனங்கள்

(ஈ) நிதி அதிகாரக் கையளிப்பு

(உ) கல்விசார் பதவியணியினரின் வருகை, வெளியேறல் மற்றும் விடுப்பு